எனினும் விழிக்கின்றேன்,எனின்ம் கற்ப்பிக்கின்றேன்

ஒளியற்ற இரவுகளுடனும்
இருளறியாத் தலையணை நனைப்புகளுடனும்
செவித்திரைக் கிழியும் குரல்களுடனும்
விழிமூட விடாக் கனவுகளுடனும் சிந்தனைகளுடனும்
இருபத்து இரண்டு ஆண்டுகள்
இந்த இடம் யாவும்
என் கால்தடங்கள் பதிய உயிர்த்திருக்கிறேன்;
எனினும் என் முகத்தடம் இங்கு வாழவில்லை!

நான் ஒருபோதும் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை; கொண்டாடப்பட்டதில்லை!
வலிமைகளைத் தோழனாய் கண்டு வலிகளை நேசமாய் கொண்டு
கற்குவியல்கள் நடுவே
வளர்ந்த குழந்தை நான் !

பாராட்டுகளும் கைத்தட்டல்களும்
சூழ்கின்றன; எனினும்,
வகைளுடனான இடைவேளை இன்னும் குறையவில்லை.
தொட்டச்சினுங்கி என்கிறார்கள் சீண்டல்களுக்கு சினுங்கக் கூடாது
என்றால் என்ன நியாயம்?

வேடங்களற்ற வேங்கை நான் நிலையாமையிலும் நேர்மை தவறவில்லை
முகத்திரை அணிந்து வஞ்சித்ததில்லை தன்னிலை மாறாது நிற்கிறேன்
உண்மைகள் விளங்கினேன்
பாதைகள் செதுக்கினேன்
விதிகள் விளக்கினேன்
கனவுகள் துரத்தினேன்
என் பதினெட்டில்!

புகழ்ச்சி துறந்த
ஓர் தமிழ் ஆசிரியை நான்;
என் இளமை,
என் நேரம்
என் ஊடல்
அனைத்தையும் இரைத்தேன்!

மருத்துவர், செவிலியர்,
ஆலோசகர், மற்றும் பல
எதிர்கால இதயங்களுள்ளே
ஆசிரியையாய் வாழ்கிறேன்;
எனினும், என்னுள்
இருக்கும் தூயச் சுடர்,
அவர்கள் அறியவில்லை!

மெருகேற்றிய வைரம் அல்ல நான்
என் கறிப்பொருள் கொண்டே

என் உலகம் செதுக்கினேன்; தலைமைக்கான தனிச்சிறப்புகள்
இல்லை என்றார்கள்... பல
இதயங்களுக்கு தலைமை காத்தேன்;
புத்தகம் வரைந்தேன்!

இந்தச் சமூகத்திற்கு என் முகத்தடம் பதியாமல் இருந்திருக்கலாம்..
அதற்கான தேவையும் இல்லை;
நான் கற்குவியலிடையே வளர்ந்தேன்; மணல் படுக்கையில் அல்ல!
எனினும் நான் விழித்துகொண்டே இருப்பேன்;
நிழலின் துணை கூட இல்லை
எனினும் நடந்துக்கொண்டே இருப்பேன்!